# விதி வகை

## 1. நுழைவு

தமிழிலும் வடமொழியிலும் விதி என்றொரு சொல் உண்டு.

வினைச்சொல்லாக வரும் போது விதி என்பது இன்னதைச் செய் என்று நியமிப்பதாக, பொதுவான வழக்கில் காண்கிறோம்.

பெயர்ச்சொல்லாக வரும் போது இது ஊழ் என்ற அர்த்தத்திலேயே பெரும்பாலும் புழங்கக் காண்கிறோம். "நமது தலைவிதி" என்பது சாமான்யச் சொற்றொடர்.

என்றாலும், ஸமஸ்க்ருதத்தில் இதற்கு சட்டம், வழி, வினைமுறை, நடைமுறை, ஊழ் போன்ற பல அர்த்தங்கள் உள்ளன.

தமிழிலும் சட்டம், தீர்ப்பு, ஆணை, கட்டளை, ஒன்றை அமைக்கும் முறை, நீதி, ஊழ் போன்ற அர்த்தங்கள் உள்ளன.

"தைவம் திஷ்டம் பாகதேயம் பாக்யம் ஸ்த்ரீ நியதிர் விதி:" என்பது அமரகோஶம்.

இச்சொல்லை ஆழ்வார்கள் மிகவும் அழகாகவும், பல அர்த்தங்களிலும் கையாண்டிருக்கிறார்கள். இக்கட்டுரையில், சிலவற்றைச் சுருக்கமாக அநுபவிப்போம்.

## 2. நியமனம்

நாச்சியார் திருமொழியில் துவக்கத்திலேயே ஆண்டாள் தன்னை வேங்கடவனிடத்தில் விதிக்கும்படி வேண்டுகிறாள்:

தையொரு திங்களும் தரைவிளக்கித் தண்மண்டலமிட்டு மாசி முன்னாள்
ஐய நுண்மணற்கொண்டு தெருவணிந்து அழகினுக்கலங்கரித்து அனங்கதேவா!
உய்யவுமாங்கொலோ என்று சொல்லி உன்னையும் உம்பியையும் தொழுதேன்
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே[1]

அதாவது, அவனுக்கு அந்தரங்க கைங்கர்யம் செய்யும்படி தன்னை நியமிக்க வேணும் என்று மன்மதனிடத்தில் விண்ணப்பம் செய்கிறாள்.

அதன்றி, மூன்றாம் பாட்டில் திருவேங்கட மலை மீது 'வாத்ஸல்யாதி குணோஜ்ஜ்வலாம்'[2] என்று குன்றிலிட்ட விளக்காய் இருக்கும் 'வேடார் திருவேங்கடமேய விளக்கினில்'[3] தான் புகும்படியாய் நியமிக்க வேண்டும் என்று "வித்தகன் வேங்கடவாணன் என்னும் விளக்கினில் புகவென்னை விதிக்கிற்றியே"[4] என்றாள்.

இவ்விரண்டு இடங்களிலும், இதற்கடுத்த பாசுரத்திலும், நியமனம் என்ற

[1] நாச்சியார் திருமொழி 1.1
[2] ஶ்ரீவேங்கடேச ப்ரபத்தி 1
[3] பெரிய திருமொழி 4.7.5
[4] நாச்சியார் திருமொழி 1.3

செயற்சொல்லாக விதி வருகிறது.

"ஒல்லை விதிக்கிற்றியே"[5] என்றவிடத்து விரைந்து தலைக்கட்டுவிக்க வேணும் எனப் பாரிக்கிறாள் நாச்சியார் என்கிறார் காஞ்சி ப்ர ப அண்ணங்கராசார்யார் ஸ்வாமி.

**3. பாக்யம்**

இவ்வர்த்தத்தில் ஆழ்வார்கள் இச்சொல்லை ப்ரயோகித்திருப்பது அழகியதானதொன்றாகும். விதி என்பது நல்விதி என்றும், தீயவிதி என்றும் வரலாமாயிடினும், அதை நன்மை என்பதாகப் ப்ரயோகப்படுத்துகின்றனர் ஆழ்வார்கள்.

நாச்சியார் திருமொழியில் மூன்றாம் திருமொழி பாசுரம் காண்மின்:

இதுவென் புகுந்ததிங்கந்தோ! இப்பொய்கைக்கெவ்வாறு வந்தாய்?
மது இன்துழாய் முடிமாலே! மாயனே! எங்களமுதே!
விதி இன்மையால் அது மாட்டோம் வித்தகப்பிள்ளாய்! விரையேல்
குதி கொண்டரவில் நடித்தாய்! குருந்திடைக் கூறை பணியாய்[6]

இங்கு விதி என்ற சொல் தங்களுடைய விதி, அதாவது பாக்யம் என்ற அர்த்தத்தில் வருகிறது. தன்னோடு ஸம்ஸ்லேஷிக்க ஆயர்பெண்களை கண்ணன் அழைக்க, தங்களுக்குரிய இயற்கை நாணத்தாலே, தங்கள் பாக்ய ஹாநியாலே அதற்கு இசைய மறுக்கும் இடத்தில், அது தங்கள் விதி வசமன்று என்கிறார்கள் ஆயர்சிறுமியர்.

திருவேங்கடத்தில் தான் ஒரு மீனாய், அதாவது எம்பெருமான் பொன்மலையில் ஏதேனும் ஆகும்படியான விதியைப் பெற வேணும் என்று பாரிக்கிறார் குலசேகரப் பெருமாள்:

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன் ஆவேனே[7]

இங்கு தனக்கு அவ்வாறு ஒரு பாக்யம் ஏற்பட வேண்டும் என்றும், அது இப்போது ஏற்படாவிட்டாலும். இனி வரும் ஏதேனும் ஒரு பிறப்பில் ஏற்படும் விதி அமைந்தாலே போதும் என்கிறார் ஆழ்வார்.

**4. மோக்ஷம்**

விதி என்பதை பரமபதமாகிற மோக்ஷம் என்று காட்டுகிறார் தொண்டரடிப்பொடி ஆழ்வார் தம்முடைய திருமாலையில்.

வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில் சாக்கியர்கள் நின் பால்
பொறுப்பரியனகள் பேசில் போவதே நோயதாகி
குறிப்பெனக்கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமா நகருளானே![8]

---

[5] நாச்சியார் திருமொழி 1.4
[6] நாச்சியார் திருமொழி 3.2
[7] பெருமாள் திருமொழி 4.2
[8] திருமாலை 8

இங்கு சமணர்களும், சைவர்களும், பௌத்தர்களும் எம்பெருமானைப் பற்றின விஷயத்தை கேட்கப் பொறாத வெறுப்புடையர்கள் என்று அவர்களை விலக்கும் ஆழ்வார், அவர்களுக்கு பகவத் ஸமாஸ்ரயணமாகிற பாக்யம் இல்லை என்று அவர்களை "விதி இல்" என்கிறார்.

"பகவதுத்கர்ஷத்தை அறிந்து தத்ஸமாஸ்ரயணத்தைப் பண்ணி அநுபவிக்கைக்கீடான பாக்யமில்லாத பௌத்தர்" என்பது பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தி.

இங்கு பௌத்தர் என்றதை, சமணர்க்கும், முண்டர்க்கும் கொள்ளத்தகும். விதி என்பதை பாக்யம் என்றாலும் அப்பாக்யமானது அவனுக்குச் செய்யும் கைங்கர்யம் என்பதால் மோக்ஷத்தையே குறிக்கிறார் ஆழ்வார் எனவும் கொள்ளத்தகும்.

இவ்வாழ்வாரே, மேலே 'விதி இலா என்னைப் போல'[9] என்று இதையே வலியுறுத்துகிறார். இவ்விடத்தில் விதி என்றதை நல்வினை எனக் கொள்ளலாம் என்கிறார் காஞ்சி ஸ்வாமி.

### 5. முறை

பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் "மந்திர விதி" என்று ப்ரயோகிக்கிறார்.

இந்திரனுக்கென்று ஆயர்கள் எடுத்த எழில் விழவில் பழ நடை செய்
மந்திர விதியில் பூசனை பெறாது மழை பொழிந்திடத் தளர்ந்து ஆயர்
எந்தம்மோடின ஆநிரை தளராமல் எம்பெருமான்! அருள் என்ன
அந்தமில் வரையால் மழை தடுத்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே[10]

அதாகிறது, மந்திரத்தைச் சொல்ல வேண்டிய முறை என்றபடி. இந்திரனுக்கு அநாதி காலமாகச் செய்து வரும் முறையில் ஆராதனை செய்யாமல் இடையர்கள் இருக்க, அதைப் பொறாத அவன் மழையை விடாமல் பொழிய, தங்களையும், தங்கள் பசுக்கூட்டங்களையும் ரக்ஷிக்க வேணும் என ஆயர்கள் வேண்ட, மிகப்பெரியதான கோவர்த்தன மலையை எடுத்துக் காத்தவனைத் திருவல்லிக்கேணியில் கண்டேன் என்கிறார் ஆழ்வார்.

மந்திர விதி என்பது வேதமென்பதால் இடையர்களுக்கு அதிகாரம் இல்லையே எனில், இங்கு அது வேதமன்று, வழி வழியாக அவர்கள் அறிந்து வந்த முறை என்பதாகும். "மந்த்ரோக்தமானபடியே பண்ணுகிற அநுஷ்ட்டாநரூபமான பூஜை" என்பர் பெரியவாச்சான்பிள்ளை.

### 6. திண்ணம்

விதி என்பதை நிஸ்சிதம், அதாவது இது திண்ணம் என்னும் ஒன்று என்பதைக் காட்டுகிறார் திருமங்கைமன்னன் "வினை பற்றறுக்கும் விதியே" என்று.

பாசுரம் காண்மின்.

துணைநிலை மற்றெமக்கு ஒருளதென்றிராது தொழுமின்கள் தொண்டர்! தொலைய

[9] திருமாலை 15
[10] பெரிய திருமொழி 2.3.4

உண முலை முன் கொடுத்த உரவோளதாவி உகவுண்டு வெண்ணெய் மருவி
பணமுலை ஆயர் மாதர் உரலோடு கட்ட அதனோடும் ஓடி அடல் சேர்
இணை மருதிற்று வீழ நடை கற்ற தெற்றல் வினை பற்றறுக்கும் விதியே[11]

ஸ்ரீ க்ருஷ்ணனே நமக்குத் துணை என்றிருப்பின் அவன் நம் பாவங்களை வாசனையோடே அறுத்துத் தள்ளுவான் என்பது நிச்சயம் என்கிறார் ஆழ்வார்.

நிற்க.

இது போலவே நம்மாழ்வாரும் காட்டுவதாக பொதுவான அபிப்ராயம் ஒன்றுளது. திருவாய்மொழியின் இறுதியில் தாம் பரமபதம் புகுந்ததாகப் பேசும் ஆழ்வார் கூறும் பாசுரம் காண்மின்:

வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர்
வைகுந்தன் தமர் எமர் எமதிடம் புகுதென்று
வைகுந்தத்து அமரரும் முனிவரும் வியந்தனர்
வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே[12]

இதைக் கொன்டு பலரும், இன்றில்லாவிட்டலும் சரி, இந்தப் பிறப்பின் முடிவில் இல்லாவிட்டாலும் சரி, என்றாவது ஒரு நாள் மண்ணவர்கள் வைகுந்தம் புகுவது திண்ணம், அது தான் அவர்கள் விதியெனப் பொருள் கூறுவர். ஆனால் இவ்விடத்தில் அர்த்தம் அதுவன்று.

இங்கும் விதி என்ற சொல் பாக்யம் என்ற அர்த்தத்திலேயே வந்துள்ளது. இதை "மண்ணவர் வைகுந்தம் புகுவது (நம்) விதியே" என்று கொண்டு, இவ்வுலகத்தவர் பரமபதம் வந்து சேரும்படியான பாக்யம் நாம் பெற்றோமே என்று வைகுந்தத்து அமரரும் முனிவரும் வியந்து கொண்டாடினர் என்பதே ஆழ்வாரின் திருவாக்கு.

"இச்சுவை தவிர யான் போய்"[13] என்றும், "ஏரார் முயல் விட்டுக் காக்கைப்பின் போவதே"[14] என்றும், இங்கு "வானவர்கள் சந்தி செய்ய நின்றான்"[15] என்றும், "வானவர் வானவர் கோனொடும்"[16] என்றும், வானவர்களும் அநுபவிக்கும் மேன்மையை விடேன் என்றிருக்கும் இவ்வுலகத்தவர்கள், இதை விட்டு விண்ணுலகம் எனும் அங்கு வந்தார்களே என்று வியந்தனர் என்றபடி.

"அங்குள்ள நித்யஸூரிகள் 'பரமபத்திலே வருவதே! இதென்ன பாக்யபலம்!' என்று விஸ்மயப்பட்டார்கள்" என்பது இருபத்துநாலாயிரப்படி. "கடலில் நீர் ஸஹ்யத்திலேயேறக் கோத்தாற்போலே, ஸம்ஸாரிகள் பரமபதத்திலே புகுரும்படிக்கீடாக பாக்யத்தைப் பண்ணுவதே! என்று விஸ்மயப்பட்டார்கள்" என்பது ஈடு.

இதையே "விதி வகை புகுந்தனர்"[17] என்று தம்முடைய அடுத்த பாசுரத்தில் தெளிவாகக்

---

[11] பெரிய திருமொழி 11.4.9
[12] திருவாய்மொழி 10.9.9
[13] திருமாலை 2
[14] சிறிய திருமடல்
[15] அமலனாதிபிரான் 3
[16] திருவாய்மொழி 3.3.2
[17] திருவாய்மொழி 10.9.10

காட்டுகிறார் ஆழ்வார்.

**7. எம்பெருமான்/க்ருபை**

இதன்றி எம்பெருமானையே விதி என்றழைக்கிறார் திருமங்கையாழ்வார். அவனது க்ருபையே விதி என்றும் காட்டுகின்றனர் ஆழ்வார்கள்.

திருக்குறுந்தாண்டகம் முதல் பாசுரத்தில் "என் மனத்து வந்த விதியினை" என்கிறார் ஆழ்வார்.

நிதியினைப் பவளத் தூணை நெறிமையால் நினைய வல்லார்
கதியினைக் கஞ்சன் மாளக் கண்டு முன் அண்டம் ஆளும்
மதியினை மாலை வாழ்த்தி வணங்கி என் மனத்து வந்த
விதியினைக் கண்டு கொண்ட தொண்டனேன் விடுகிலேனே[18]

இங்கு விதி என்றது அவன் கருணை உடையவன் என்றதைக் காட்டுகிறது. "அவன் ஸ்வாதந்த்ர்யத்தாலும் என் கர்மத்தாலும் தவிர்க்க ஒண்ணாத க்ருபை" என்பர் பெரியவாச்சான்பிள்ளை.

அப்படிப்பட்ட கருணையெனும் விதி அவனையும் சூழ்ந்தது என்றார் நம்மாழ்வார்.

மதுசூதனையன்றி மற்றிலேன் என்று எத்தாலும் கருமம் இன்றி
துதி சூழ்ந்த பாடல்கள் பாடியாட நின்று ஊழியூழி தொறும்
எதிர் சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய
விதி சூழ்ந்ததால் எனக்கேல் அம்மான் திரிவிக்கிரமனையே[19]

"அம்மான் திரிவிக்கிரமனை எனக்கே அருள்கள் செய்ய எனக்கென்னவே ஒரு விதி சூழ்ந்தது" என்று அந்வயம்.

"தம்மை விஷயீகரித்தல்லாது எம்பெருமானை இருக்க ஒட்டாமையால், அவனுடைய க்ருபா குணத்தை விதி என்கிறது" என்கிறார் நஞ்சீயர். "என்னை விஷயீகரிக்கைகு ஒரு விதி சூழ்ந்தது" என்பது ஈடு.

"பகவத் க்ருபையை விதி என்பானென்? என்னில்; அவனுக்குத் தப்ப ஒண்ணாதாகையாலே" என்றும், "வாதார்ஹமான காகத்துக்கு விட்ட அம்புக்குட்படக் கண்ணழிவு பண்ணுமவரிறே" என்றும், ஈட்டிலே காட்டுகிறார் மஹாசார்யரான நம்பிள்ளை.

இது தானே அவனை எதிர் சூழல் புக்குத் திரியும்படியாகச் செய்தது என்கிறார் ஆழ்வார்.

இங்கு "இவன் நடுவே அடியான் என்று ஓலைப்படாப் ப்ரமாணம் பக்ஷபாதி ஸாக்ஷி வன்களவில் அநுபவமாக இந்திர ஞாலங்கள் காட்டிக் கொள்ளக் காப்பாரற்று விதி சூழ்ந்தது" என்னும் ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி நோக்கத் தக்கது.

[18] திருக்குறுந்தாண்டகம் 1
[19] திருவாய்மொழி 2.7.6

"விதி வாய்க்கின்று காப்பார் ஆர்"[20] என்றவிடத்தும் இது அவன் க்ருபை என்றே காட்டப்பட்டது. அவன் க்ருபைவெள்ளம் கரைகடந்து ப்ரவாஹித்தால், அதைத் தடுக்க வல்லர் யார்? என்கிறார் ஆழ்வார். அதாவது, ஸர்வசக்தனான அவனாலும் தடை செய்ய முடியாதென்றபடி.

அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான்? யான் ஆர்?
எம்மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர்
கைம்மா துன்பொழித்தாய்! என்று கைதலை பூசலிட்டே
மெய்ம்மாலாய் ஒழிந்தேன் எம்பிரானும் என் மேலானே[21]

என்றவிடத்திலும் பகவத் க்ருபை என்ற அர்த்தமே அமைகிறது என்று காண்கிறோம். தப்பாத அருளாகிற விதி, யாராய் இருந்தாலும் அவர்களுக்கு பலித்தே விடும் என்றபடி. "எவ்வளவு மஹாபாபத்தைப் பண்ணினார்க்கும், பகவத் க்ருபை பெருகா நின்றுள்ள இடத்தில் தப்ப விரகில்லை கிடீர்" என்பது ஈடு.

மற்றோரிடத்தில் ஆழ்வார்,

என்றும் ஒன்றாகி ஒத்தாரும் மிக்கார்களும் தன்தனக்கு
இன்றி நின்றானை எல்லா உலகும் உடையான் தன்னை
குன்றம் ஒன்றால் மழை காத்த பிரானைச் சொல் மாலைகள்
நன்று சூட்டும் விதி எய்தினம் என்ன குறை நமக்கே? [22]

என்கிறார். அதாவது, உயர்ந்தவனான அவனைச் சொல்லாரங்களால் சூட்டும்படியான அவன் அருளைப் பெற்ற தமக்கு குறை ஏது என்று மகிழ்கிறார். "தமக்கு பலிக்கையாலும், அவனுக்குத் தவிர ஒண்ணாதாகையாலும் 'விதி' என்கிறார்" என்பது ஈடு.

முன்னம் நோற்ற விதி கொலோ? முன்னர் செய்த பாக்யத்தின் பலமோ? முன்னே பண்ணி வைத்த ஸுக்ருத பலமோ என்றபடி.

## 8. சாஸ்த்ரம்

விதியை சாஸ்த்ரம் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தும் மங்கைமன்னன், எம்பெருமானாகிற வேத விளக்கை சாஸ்த்ரங்களில் விதித்தபடியே உபாசித்து அவனைக் காண்பவர்கள் அவனை உண்மையில் காணமாட்டார் என்பதை

இளைப்பினை இயக்கம் நீக்கி இருந்து முன் இமையைக் கூடி
அளப்பில் ஐம்புலன் அடக்கி அன்பு அவர் கண்ணே வைத்து
துளக்கமில் சிந்தை செய்து தோன்றலும் சுடர் விட்டு ஆங்கே
விளக்கினை விதியின் காண்பார் மெய்ம்மையைக் காண்கிற்பாரே[23]

என்றார். தம்முடைய முயற்சியால் அவனைக் காண முயல்கிற்பார்க்கு அவன் வசப்படான் என்றபடி.

திருமங்கையாழ்வார்

---

[20] திருவாய்மொழி 5.1.1
[21] திருவாய்மொழி 5.1.7
[22] திருவாய்மொழி 4.5.7
[23] திருக்குறுந்தாண்டகம் 18

ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம் செய்ய வேண்டா தமதா இமையோர் உலகாளகிற்பீர்!
கானாட மஞ்ஞைக் கணமாட மாடே கயலாடு காநீர்ப் பழனம் புடை போய்
தேனாட மாடக் கொடியாடு தில்லைத் திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே[24]

என்றதும் இங்கே நோக்கத் தக்கது.

**9. வினைப்பயன்**

நம்மாழ்வாரின் பெரிய திருவந்தாதி பாசுரம் காண்மின்.

வாழ்த்தி அவன் அடியைப் பூப்புனைந்து நின் தலையைத்
தாழ்த்து இருகை கூப்பு என்றால் கூப்பாத - பாழ்த்த விதி!
எங்குற்றாய் என்றவனை ஏத்தாது என் நெஞ்சமே!
தங்கத்தான் ஆமேலும் தங்கு[25]

அவனைத் தொழுதெழு என்றால் அதைச் செய்ய முடியாத பாழும் விதி உடைய என் மனமே என்று தன் மனதை நொந்து பேசுகிறார் ஆழ்வார். இதுவே அதன் விதிப் பயன் என்றபடி.

"முந்துற்ற நெஞ்சே"[26] என்று ஆழ்வாருக்கு முன்னேயே அவனிடம் சென்றிருக்கும் அவர் மனது இப்படியும் சில சமயம் உள்ளது போலும். அப்படி இருந்தாயாகில் அப்படியே கிடப்பாய் என்று வெறுத்துப் பேசுகிறார் ஆழ்வார்.

**10. ப்ரகாரம்/முறை**

திருவாய்மொழியில் நம்மாழ்வார்

அவரவர் தமதமது அறிவறி வகை வகை
அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதி வழி அடைய நின்றனரே[27]

என்றவிடத்து, அந்தந்த ஆச்ரணீயர் தங்கள் முறைகளிலே வைத்த ப்ரகாரங்களிலே அடையும்படியாக அந்தராத்மாவாக எம்பெருமான் நின்றான் என்கிறார்.

அதாவது, மற்ற தெய்வங்களை ஆச்ரயிப்பவர்கள் அதற்கென்று விதிக்கப்பட்ட முறைப்படியே ஆச்ரயிக்கவும், அப்படி அவர்கள் செய்யும் போது அதற்கு அந்த தெய்வங்கள் பலன் கொடுக்கும்படிக்கு அந்தர்யாமியாக எம்பெருமான் உளன் என்றார்.

"ஆச்ரயிக்கிறவர்கள் வித்யுக்த ப்ரகாரத்தாலே ஆச்ரயிக்கவும், ஆச்ரணீயர் அவர்களுக்கு பலப்ரதாநத்துக்கு சக்தராகவும் அந்தராத்மதயா நின்றார்" என்பது பெரியவாச்சான்பிள்ளயின் வ்யாக்யாநம்.

---

24 பெரிய திருமொழி 3.2.1
25 பெரிய திருவந்தாதி 84
26 பெரிய திருவந்தாதி 1
27 திருவாய்மொழி 1.1.5

பிறிதோரிடத்தில்,

என் செய்ய தாமரைக் கண் பெருமானார்க்கு என் தூதாய்
என் செய்யும் உரைத்தக்கால்? இனக்குயில்காள்! நீரலிரே?
முன் செய்த முழுவினையால் திருவடிக்கீழ்க் குற்றேவல்
முன் செய்ய முயலாதேன் அகல்வதுவோ? விதியினமே[28]

என்று, முன்னம் அவனுக்குக் கைங்கர்யம் செய்யாமல் கிடந்த நான் இன்னமும் விலகி இருப்பதோ முறை என்கிறாள் பராங்குச நாயகி.

"எங்கள் அபிமதம் பெறுகைக்கு எங்கள் பக்கலொரு நன்மை இல்லாதபின்பும் தாழ்க்கும் இத்தனையோ" என்கிறாள், என்று பிள்ளை திருநறையூரரையர் பணிப்பர்.

விதி என்றால் பாபம் என்றொரு அர்த்தமும் உண்டு. அதாவது, முழுவினை என்னும் மஹாபாபத்தைச் செய்த பாவியான நான் (திருமங்கையாழ்வாரும் "பாவமே செய்து பாவியானேன்"[29] என்றாரிறே) அகல்வதுவோ என்றபடி. விதியினனே என்று பாடம் அமைந்தாலும் இவ்வர்த்தத்திலேயே அது வரும்.

**11. மார்க்கம்**

திருவாய்மொழியில் ஆழ்வார் பாசுரம் காண்மின்.

மேவித் தொழுது உய்ம்மினீர்கள் வேதப் புனிதவிருக்கை
நாவில் கொண்டு அச்சுதன் தன்னை ஞான விதி பிழையாமே
பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து
மேவித் தொழும் அடியாரும் பகவரும் மிக்கதுலகே[30]

இங்கு ஞான விதி பிழையாமே என்றது பக்தி மார்க்கம் தவறாதபடி என்றதாயிற்று. இந்த இடத்தில் ஞானமென்றது அதன் விசேஷமான பக்தியைச் சொல்லுகிறது என்கின்றனர் நம் பூர்வர்கள்.

"பகவன் ஞானவிதி பணிவகையென்று இவர் அங்கீகாரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்"[31] என்ற ஆசார்ய ஹ்ருத்ய ஸ்ரீஸூக்தியில், இதை பகவத் கீதை என்னவும் காட்டப்பட்டிருக்கிறது.

எப்படி எனினும், அச்சுதனான அவனை அடைந்து, வேதத்தில் ப்ரதிபாதிக்கபட்ட பக்தி மார்க்கத்தைத் தப்பாமல் தொடரும் கைங்கர்ய நிஷ்டரையும், குணநிஷ்டரையும் போல, நீங்களும் ஆஶ்ரயிங்கோள் என்கிறார் ஆழ்வார் இப்பாட்டில்.

**12. நமது விதி**

திருவாய்மொழியில் ஓர் ஆச்சரியமான பாசுரம் காண்மின்.

[28] திருவாய்மொழி 1.4.2
[29] பெரிய திருமொழி 1.9.9
[30] திருவாய்மொழி 5.2.9
[31] ஆசார்ய ஹ்ருதயம்164

அருள் பெறுவார் அடியார் தம் அடியனேற்கு ஆழியான்
அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதிவகையே
இருள் தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான் வேண்டேன்
மருளொழி நீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடி வணங்கே[32]

நமது விதி, அதாவது ஊழ் அல்லது பாக்யமடியாக அவன் நமக்கு அருள் செய்வானாக இருக்கிறான் என்று இங்கே பொருள் கொள்வர் சாமான்யர். ஆனால் ஆழ்வார் அதி ஆச்சரியமாய் ஒன்று காட்டுகிறார் என்கின்றனர் நம் பூர்வர்கள்.

எம்பெருமானார்க்கு முன்புள்ளோர் இந்த இடத்தில் "அது நம்முடைய பாக்யாநுகுணமாகவிறே" என்றனர். அதாவது, எம்பெருமான் தன்னை அழைத்துச் செல்வானாய் வந்தது தம்முடைய பாக்யவசத்தால் என்கிறார் ஆழ்வார் என்றனர். நமது புண்ய பலனுக்கேற்ப அருள் செய்கிறான் என்றபடி. ஆனால், எம்பெருமானார், அது கீழே ஆழ்வார் எம்பெருமான் தன் அடியவர்களுக்குப் பரதந்த்ரனாய் இருக்கிறான் என்று சொல்லி வந்த விஷயத்தோடு சேர அமையாது; ஆதலால் 'நாம் விதித்தபடியே செய்வானாய் இருந்தான் என்கிறார்' என்று பணித்தார்.

இங்கு விதி என்பது விதிப் பயனாக என்றிராமல் விதித்தபடி என்று கொண்டு, எம்பெருமான் அருள் தருவது தாம் விதித்தபடி என்று உரைக்கிறார் ஆழ்வார்.

இஃது அமைந்தது, தாம் எம்பெருமான் அடியான் என்பதாலில்லாமல், அவன் அடியார் தம் அடியானாய் இருப்பதால் என்னும் உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவ சாஸ்த்ரார்த்தத்தை இத்தால் உணர்த்துகிறார் ஆழ்வார்.

நெடுமாற்கடிமை பதிகத்தில் அவர் சொன்னது இங்கு பலித்ததாயிற்று.

"அஹம் ஸர்வம் கரிஷ்யாமி"[33] என்ற இளைய பெருமாள், "க்ரியதாம் இதி மாம் வத"[34] என்று ஏவிப் பணிக் கொள்ள வேணும் என்று பாரித்தானிறே. அதைப் போலவே எம்பெருமானும் எல்லாம் தருவானாய் விரைந்து வந்தும், ஆழ்வார் விதிக்க வேணும் என்று கட்டுப்பட்டு நின்றான்.

அன்று ஒரு ஆய்ச்சி கையால் அவன் கட்டுண்டது ஒரு கயிற்றினால். இன்று ஆழ்வார் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நிற்கும் இந்த குணத்தை எங்கு போய்ச் சொல்லுவது?

"'இவர் பரதந்த்ரர், நம்மை நியமிக்க மாட்டார்' என்று அறியாதே 'இவர்க்குத் தான் பரதந்த்ரனாய் இவர் நியமிக்கக் கொடுபோகவேணும்' என்று அவசரப்ரதீக்ஷனாய் இருக்கிறவனுடைய வ்யாமோஹாதிசயம்" என்பது இருபத்துநாலாயிரப்படி.

இங்கு நம் சொல் வகையே என்னாமல் நம் விதி வகையே என்றது, சொல்லைக் கடக்கலாம், ஆனால் விதியைக் கடந்தால் பாபம் நேரும் என்றஞ்சுவாரைப் போலே "நியமிக்க வேணும், நியமிக்க வேணும்" என்று தவித்திருந்தான் எம்பெருமான் என்கிறார் ஆழ்வார்.

இங்கு ஈட்டிலே ஓர் ஐதிஹ்யம் காட்டப்பட்டிருக்கிறது.

---

[32] திருவாய்மொழி 10.6.1
[33] ஸ்ரீராமாயணம் 2.31.25
[34] ஸ்ரீராமாயணம் 3.15.7

ஸ்தோத்ரரத்நத்தில் ஆளவந்தார், எம்பெருமான் தன்னடியவரான சேனை முதலியார் எதை விண்ணப்பம் செய்தாலும், அதை அப்படியே தன் திருக்கண் பார்வையாலே நியமித்து விடுவான் என்றார். ஸ்லோகம் காண்மின்:

த்வதீயபுக்தோஜ்ஜிஉதமேஷபோஜிநா
த்வயா நிஸ்ருஷ்டாத்மபரேண யத்யதா |
ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத்
ததா-நுஜாநந்தமுதாரவீக்ஷணை: ||[35]

இதை விவரிக்கும் பட்டர், மூத்த அமைச்சர்கள் முன் பணிவுடன் நிற்கும் இளம் அரசனைப் போலே, விஷ்வக்சேனர் முன் எம்பெருமான் நிற்பான் என்றும், அவர் விண்ணப்பங்களை எல்லாம் "ஐயர் யாதொன்று சொல்லிற்று அவையெல்லாம் அப்படியே" என்று தன் திருக்கண் பார்வையினாலேயே நியமித்து எழுதிக் கொடுத்து விடுவான் என்றும், நேரே நடப்பது போல் விளக்கினார் என்றும், அதைக் கேட்டிருந்த கிடாம்பியாச்சானும் மற்றவர்களும் கண்களில் நீர் பெருகக் கேட்டுக் கொண்டிருந்தனர் என்றும், அதைத் தாம் நேரிலே கண்டதாக நம்பிள்ளை அருளிச் செய்துள்ளார்.

ஆக, இங்கு நமது விதி என்றவித்தால் எம்பெருமான் தன்னடியார்க்கு வசப்பட்டு அவர்களுக்கு பரதந்த்ரனாய் இருப்பான் என்னும் உயர்ந்த விஷயம் காட்டப்பெறுகிறது.

**13. ஆச்ரித பாரதந்த்ர்யம்**

சேதனனுக்கு ஈஶ்வரனிடத்தில் பாரதந்த்ர்யம் உண்டென்பது தெளிவு. ஆனால், எம்பெருமானுக்கு அடியாரிடத்தில் பாரதந்த்ர்யம் உண்டென்பது வியக்கத் தக்கதாம்.

ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரத்தில், பிள்ளை லோகாசர்யர் "ஸ்வரூபசித்தியும் அத்தாலே"[36] என்ற ஸூத்ரத்தில், சேதனனுக்கு ஸ்வரூபம் ததீய பாரதந்த்ர்யம் என்றும், ஈச்வரனக்குச் ஸ்வரூபம் ஆச்ரித பாரதந்த்ர்யம் என்றும் கூறுகிறார்.

திருவாய்மொழியில் ஆழ்வாரும் "தேவும் தன்னையும்"[37] என்றவிடத்தில் இதையே காட்டி அருளினாராயிற்று. தேவு என்று தன்னுடைய பரத்வத்தையும், தன்னை, அதாவது தானான தன்மை என்று, தன்னுடைய ஆச்ரித பாரதந்த்ரத்தையும் சொன்னான் என்கிறார்.

காட்டுக்கு எம்பெருமான் எழுந்தருள, பின் தொடர்ந்த பரதனின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு அயோத்திக்கு மீண்டு, அரசாள வேணும் என்ற வசிஷ்ட முனிவன் பெருமாளை நோக்கிக் கூறும் வார்த்தை:

பரதஸ்ய வச: குர்வந் யாசமாநஸ்ய ராகவ |
ஆத்மாநம் ந அதிவர்தே: த்வம் ஸத்ய தர்ம பராக்ரம ||[38]

பரதன் சொல்வதை ஏற்பதால் நீ உன்னை மீறுவதென்பதில்லை - அதாவது, உன் தன்மைக்கேற்ப என்றபடி. இங்கு பொருள் கொள்வார் "ஆத்மபூதம் பரதம் நாதிவர்தேதா:"

---

[35] ஸ்தோத்ர ரத்நம் 42
[36] ஸ்ரீவசநபூஷணம் 153
[37] திருவாய்மொழி 2.7.4
[38] ஸ்ரீராமாயணம் 2.111.7

என்பதுண்டு - அதாவது உயிர்நிலையாய் இருக்கும் பரதாழ்வானை மீறாது என்பர்.

பட்டர் காட்டும் உயிரான வாக்கை ஈட்டில் வெளிப்படுத்துகிறார் நம்பிள்ளை: "நீரானதன்மை ஆகிறது ஆச்ரித பரதந்த்ரராகை. உம்முடைய தம்பி சொன்ன நீரானதன்மையை இழவாதே கொள்ளும் என்கிறான்".

இங்கு தானான தன்மை என்றது ஆச்ரிதபாரதந்த்ர்யமாகும். அதனை இழக்க வேண்டாம் என்றான் ரிஷி என்றார் பட்டர்.

ஆழ்வானும் வரதராஜ ஸ்தவத்தில்

அநந்யாதீநத்வம் தச கில ஜகு: வைதிககிர:
பராதீநம் த்வாம் து ப்ரணதபரதந்த்ரம் மநுமஹே |[39]

என்றாரிறே.

யார்க்கும் கட்டுப்படாத ஸ்வாதந்த்ர்யம் என்னும் குணம் உமக்கு உண்டென்று வேதங்கள் சொல்லியிருக்கின்றன. ஆனால் நாங்களோ உன்னை உன்னடியார்களுக்குக் கட்டுப்பட்ட பரதந்த்ரனாகவே கருதுகிறோம் என்கிறார்.

## 14. முடிவு

ஆக, விதி என்ற சொல்லைப் பல வகையில் கையாண்டும், அதன் மூலமாக உயர்ந்த ஸம்ப்ரதாயார்த்தங்களை கொடுத்தும் அருளினர் நம் ஆழ்வார்கள். இதை பூர்வாசார்யர்களின் வ்யாக்யானத்தை அன்றி நம் போல்வாரால் அறிய முடியாது என்பது விதி. என்பதாலேயே அதை வ்யாக்யானித்தும், ஏடு படுத்தியும், திவ்ய சாஸ்த்ரங்களை அளித்தும் நமக்கருளினர் பூர்வர்கள். அதுவும் நமது விதியே. அவர்கள் காட்டிய அவ்விதியில் நடப்பதே நம் உஜ்ஜீவினத்திற்கான விதியாம்.

குற்றம் குறைகளைப் பெரியோர்கள் பொறுத்தருள வேணுமாய்ப் ப்ரார்த்திக்கிறேன்.

அடியேன் மதுரகவி தாசன்
TCA Venkatesan

[39] வரதராஜ ஸ்தவம் 20